## வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 - 2016

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் (சீடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 மார்ச் 31 ஆம் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவுள்ளது. 619.72 கிலோமீற்றர்கள் நீளமான முன்னுரிமை வீதிகளை மேம்படுத்தி புனரமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 61,438 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 556 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 55,250 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் சீன அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 யூன் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், கடனின் செல்லுபடியாகும் காலப்பகுதி பணவளிப்புக்கள் முடிவடையும் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடன் பெறுகைகளில், ரூபா 1,250 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 1,100 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பாக காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்திட்டத்திடமிருந்து பெறவேண்டிய மீதியொன்றாக உரிய தொகை காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீடிபீ | 500 | 55,250 | 1,090.00 | 7.38 | 1,062.41 | 497.56 | 64,142 |
| இலங்கை அரசாங்கம் | 56 | 6,188 | 100.00 | - | 41.00 | - | 7,043 |
| **மொத்தம்** | **556** | **61,438** | **1,190.00** | **7.38** | **1,103.41** | **497.56** | **71,185** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் வசதி உடன்படிக்கையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுகைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,250 மில்லியன் பெறுகைகளிலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்படுகின்றன.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள 504.8 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகள் மற்றும் 85.01 கிலோமீற்றர்கள் நீளமான மாகாண வீதிகளைப் புனரமைத்தல், 02 மேம்பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் 46

பாலங்களை அகலமாக்கி மீள நிர்மாணித்தல் என்பவற்றிற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 532.41 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகள் மற்றும் 97.30 கிலோமீற்றர்கள் நீளமான மாகாண வீதிகள் என்பவற்றை புனரமைக்கும் வேலைகள், 02 மேம்பாலங்களை நிர்மாணிக்கும் வேலைகள் மற்றும் 71 பாலங்களை மீள நிர்மாணிக்கும் வேலைகள் என்பன 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், திஹகொட – கம்புறுப்பிட்டிய – மாவரல – கொற்றபொல வீதியின் புனரமைப்பு வேலைகள் காரணமாக 64 வீட்டு உரிமையாளர்களின் ஆதனங்கள் சேதமடைந்திருந்ததுடன் அதில் 03 வீட்டு உரிமையாளர்கள் அவற்றின் மீதான இழப்பீடு தொடர்பான மதிப்பீடு போதாததன் காரணமாக செயற்திட்டத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருந்தனர்.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 செப்தெம்பர் 15 மற்றும் 2015 யூன் 22 இல் கையளிக்கப்பட்ட முறையே பதுளை – கரமெற்றிய – ஆண்டவுள்பொத்த வீதி மற்றும் தென்னகும்புர – றிகில்லகஸ்கட – றகல வீதி என்பவற்றின் புனரமைக்கப்பட்ட பிரிவுகள் 2014 திசெம்பரில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்திருந்தன. ரூபா 131.91 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கடன் பெறுகைகளில் அவற்றின் மீது ரூபா 19.48 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காப்புறுதி மேவுகையிலிருந்து சேதங்களின் கிரயத்தை அறவிடுவதற்கான சாத்தியத்தன்மை செயற்திட்டத்தால் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தேசிய வீதிகளை பராமரிப்பது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எஞ்சியுள்ள பொறுப்பாக செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்கப்பாலுள்ள வேலைகளாக இந்த மேலதிக வேலைகள் கருதப்பட்டிருந்தன.